# 11
# வடிகால் வாரியம்

“தஞ்சாவூர்ல தண்ணிக் கஷ்டம்னா நம்ப முடியுதா? ஆமா! ஆனா நெஜமா தண்ணிக்கி கஷ்டம்தான்! ஆனா மத்த ஊருங்கள்ள உள்ள கஷ்டம் இல்லெ, இது வேற!'' என்றாள் செம்பகா! குழாயடியில் உட்கார்ந்து கிடந்த குடங்கள் கேலி பேசின! வரிசையாய் கிடந்த குடங்கள் விடியற்காலை நாலு மணியிலிருந்து க்யூவில் நிற்கின்றன.

''குழாயடியில் நாலு மணிக்கே தண்ணி வருது! ராத்திரில்லாம் கொழாயடியிலேயே காத்துக் கெடக்காளே ராமுப் பாட்டி. அவளெ ஒழிக்கணும்டீ பொண்ணே. வர்ற தண்ணியெல்லாம் நெதேய்க்கும் அவ அள்ளிண்டு போய்ட்றாடீ! மிச்சம் இருக்கறதெ நீங்கல்லாம் புடிச்சுண்டு போய்ட்றேள். நாந்தான் இப்டி பேய் அலையுற மாதிரி தண்ணிக்கி கெஞ்சறேன்டி! ஒரு கொடம் விடுங்கோடி!'' என்றாள் மைதிலி மாமி!

தெருவிலிருந்த சேற்றுத் தண்ணீரை வாரி வீசி எறிந்தபடி கடந்தது சென்னைக்குப் போகிற வீறாப்பில் ஸ்டேட் திருவள்ளுவர்!

''எஞ்ச மாமி தண்ணி வருது! தோ நூல் ஒழுகுற மாறில்ல வடியிது! ஒரு கொடம் நெரம்புறதுக்கு ஒரு மணி நேரம் ஆவுது! அதுக்குள்ள தண்ணியெ நிறுத்திடுவாம் பாவி! என்னா பண்றதாம் சொல்லுங்க....'' என்றாள் ரங்கு!

''ஆமா இந்த ராமுப் பாட்டியக் கூட பத்து நாளாக் காணும் தெரியுமோ'' என்றாள் மங்கை. குழாயடிக்காரி அவள். குழாயில் சத்தம் வந்தா அவளைப் போய் எழுப்புகிற ராமுப் பாட்டியெக் காணும் என்பது அவளுக்கு வருத்தம்.

''காணுமா! சே! இஞ்சதான் எங்கியானும் சுத்திண்டிருக்கும். அசத்து! வயசு தொண்ணூறுக்கும் மேல ஆய்டுத்தோன்னோ. தாங்காது ரொம்ப நாளைக்கு! எஞ்சியானும் திண்ணேல கெடக்கும்! கொழாயெ உட்டுட்டு போக முடியுமா! அதொலெ!?'' என்றாள் லல்லு.

வடிந்த தண்ணீர் சடக்கென நின்றது! ''அடப்பாவீ!'' என்று சபித்தார்கள் திண்ணையில் நின்று 'நாசமாப் போவான்' என்று கத்தினாள் மங்கை.

சொட்டு சொட்டாகி இறுத்து நின்றது குழாய்!

தஞ்சாவூர் எல்லையம்மன் கோவில் வாசல் இறக்கத்தில் - மங்கை வீட்டு வாசல் குறட்டில் ரோட்டோரமாய் நின்ற நகராட்சிக் குழாய் பாம்பு போல சீறியது ஒரு முறை! அவ்வளவுதான் கனவு போல் தண்ணீர் காற்றாச்சு!

செம்பகா வழித்துக் கொண்டு சிரித்தாள். ''இன்னைக்கி அகுள் மோட்டுத் தண்ணிதான் தூக்கியாரணும் போல இருக்கு! பீத்தண்ணி செவங்கிக்

கொளத்துலகூடல்ல தண்ணி வரண்டு கெடக்கு. இல்லென்னா லாரித் தண்ணிக்கி பணம் கட்டணும். யாருகிட்ட இருக்கு இருவத்தஞ்சு ரூவா!''

''அடீ! செம்பகா! ஒனக்குத் தெரியுமாடீ ராமுப் பாட்டி எங்க போனான்னுட்டு!''

''யாருக்குடி மங்கெ தெரியும்? ம்ஹ்! அது பேய் மாதிரியில்ல திரியும். ராத்திரி பூரா இந்தக் கொழாயடிலெ கெடக்கும்! தண்ணி வர்ரதுக்கு மிந்தி உஷ்ஷ்ன்னு கொழாயி சத்தம் போட்டு கொட கொடன்னு தண்ணி கொட்ட ஒரு மணி நேரம் ஆவுமே! அப்ப ஏந்திரிச்சுதுன்னா யாருக்கும் தெரியாமெ தண்ணி புடிச்சுகிட்டே இருக்கும். தண்ணி கொடத்துல உளுவுற சத்தங் கேட்டு எவளாவுது எந்தரிச்சி வந்துடுவாளுவன்னுட்டு பெரிய நாண கொளாயி ஒண்ணெ சாச்சு வெச்சு கொடத்துக் குள்ள வுடுமே கெழவி! பனியில யாரும் வெளிய வாரதில்லல்ல! வெயில் காலத்துல புளுக்கத்துல அசந்து விடியப்புறந்தானே தூங்குறோம்! அப்பமும் கெளவி தண்ணி ஆறு மணி வரைக்கும் புடிச்சுப்புடும் எப்படியாவது! ஆனா அதுக்கு மிந்தியே சண்டை ஆரம்பிச்சிடும். ஒத்திய வுடாது! ஒனக்குத் தெரியாதா, ஏங்கிட்ட கேக்கிற! நல்லாருக்கு!'' என்றாள் செம்பவம்.

''இல்லெ! பதனஞ்சு நாளாச்சி! நெதய்க்கும் ராமுப் பாட்டிதான் என்னெ எழுப்பி தண்ணி புடிக்கக்கூப்பிடும். இந்த பதினஞ்சு நாளா எங்களுக்கு குடிதண்ணி கெணத்து தண்ணிதான் தெரியுமா.... அவரு திட்டுறாரு! காலையில ஏந்திரிக்க முடியல.''

''அது செரி! நீ வேற! எங்கியாவுது போய்த் தொலைஞ்சிருக்கும். நாளை காலையிலேயே கொழாய் வழியா வந்துடும் பாரேன்!''

''இல்லெ சம்பகா! எனக்குப் பயமாயிருக்கு. இப்படி இருந்ததேயில்ல தெரியுமா? தொண்ணூறு வயசுக்கு மேல பத்து ஊட்டுக்கு தண்ணி ஊத்துற பொம்பளை அது! நரம்புக் கெழவியா இருந்தாலும் கொழாயடியிலியே தானே தூங்கும், கேட்டா, 'போடி இங்கப் படுத்தாத்தான் தூக்கம் வருது. நாள் பூறா தண்ணி ஊறி காஞ்சு போயி வழுவழுன்னு தேக்கு கட்டில் மாதிரி குளுகுளுன்னு இருக்கு கருங்கல்லு' அப்படீங்கும் தெரியுமா?''

''ஆமா! அது சரி இப்ப நீயி ஏந்தான் இப்புடி ஏங்கிப் போறியாம். அது எஞ்சப் போய்ட்டுதாம்! இஞ்ச எஞ்சியாவுதுதான் போய்ருக்கும்! வந்துடும்.''

''ஆமா அவ ஒனக்கு ஒறவா ஓப்புடியாளா? நீ ஏண்டி இப்படி இத்து இத்து எலயாப் பறக்குற! ஒம்புருஷன் வெளுத்து வாங்கி நாளாச்சில்ல!? அதான்!''

''இல்லடி சம்பகா, அவருகூட கேட்டாரு. ஒனக்கென்னடீ ஆச்சு? ''காணாமயாப் போய்ட்டா கெழவீன்னு! அடிப்பாருன்னு அளுவையக்கூட அடக்கிகிட்டேன். போனப்புறம் அளுவு அளுவுன்னு அளுது கொட்டினேன்''.

''ஆமா நானும்தான் கேக்குறேனே! அப்டி என்ன அந்த பாப்பாரக் கெழவி மேல ஒரு இது ஒனக்கு? உம் புருஷனுக்கும் புடிக்காது இதெல்லாம்!''

''என்னமோ செம்பகா எனக்கும் கூட அப்படித்தான். இவ என்ன கெழவி முண்டம்ன்னுதான் இருந்தேன்! எனக்கு காபி போட கத்து குடுத்ததே இந்த ராமுக்கெழவிதான்னா நம்புவியாடீ! ரெண்டு வருஷத்துக்கு மிந்தி ஏம் ஊட்டுக்காரரு ஹூட்டுல காப்பி டீ ஏதும் குடிக்கவே மாட்டாரு. ராமுப் பாட்டி ஒரு நாளு தண்ணி புடிக்க கொழாய்க்குப் போனப்ப சொல்லுச்சு என்னடி பொண்ணு ஒன்னோட ஊட்டுக்காரன் ஊட்ல காப்பி குடிக்க மாட்டானான்னு - ஆமா பாட்டின்னேன் - ஏண்டீன்னுது ராமு! தண்ணியெக் கொதிக்க வெச்சு காப்பித் தூளெக் கொட்டி பால் ஊத்தி கலக்கி கல்யாணம் ஆனப்ப காப்பி ஆத்திக் குடுத்தேனா, அடி வுளுந்தது''

''அண்ணன் அடின்னா ஒனக்கு இப்ப சக்கரையால்ல இருக்கு?''

''அட கேளுடி செம்பகா. எம் ஊட்டுக்காரரு அடிக்க பூந்தாருன்னா என்ன ஆவும்ன்னு ஒனக்குத்தான் தெரியுமே! அழுதுகிட்டு ஒக்காந்திருந்தேனா, ராமுக் கெழவி வந்து என்னடீன்னுது - இது இப்படின்னேன்-அடிப்பாவீன்னுது! காப்பி போடவா நோக்கு தெரீலன்னுது. ஒனக்கு காப்பி கூடவா போடத் தெரியும்ன்னு கேட்டேன்!அட என்னெ என்னன்னு நெனச்சேடீ பொண்ணே! இன்னிக்கு நான் காப்பி போடறேன் நாளைக்கு நீ போடலாம்! இன்னிக்கே பாத்துப் படிச்சுக்கோன்னுது ராமு!''

''அப்புறம்?''

''வீட்டுக்கு உள்ற வந்து இது நொட்டை அது நொள்ளைன்னு கதை படிச்சுட்டு அடுப்பப் பத்த வெச்சு ஒரு துணியில காப்பித்தூளை முடிஞ்சு எடுத்து கொதிக்கக் கொதிக்க வென்னீர் போட்டு அந்த முடிச்சு மேல ஊத்தி மூடிவெச்சா! ஆச்சர்யமா இருந்துது. பால நல்லா காய்ச்சி எடுத்து பால்ல வெந்நீர் வுட்டு காப்பி டிக்காக்ஷன்ல கருக்கா கலந்து காப்பி கஷாயத்துல தண்ணி ஊத்தாம சக்கரையை லேசா கருக்கி மேல ஜீனி போட்டு ஆவி பறக்க ஆத்தி எடுத்தா பாருடீ ஆகா! அது மாதிரி நான் காப்பி குடிச்சதேயில்ல! என்னா வாசனை அந்த எழவு காப்பிக்கி! நல்லா வாழ்ந்தவளாம்ல ராமுப் பாட்டி! மவனுக எஞ்சியோ கல்கத்தால இருக்காங்களாமே பாவிங்க! இது பத்து ஊட்டுக்கு தண்ணி தூக்கி பொழைக்கிது. காப்பியெ ஒரு டம்ளர்ல எடுத்து எனக்கு குடுத்துது. 'குடிச்சுட்டு சொல்றீ பொண்ணே!' கசப்புதான். ஆனா அப்டி ஒரு ஆனந்தமான கசப்பு நான் குடிச்சதேயில்லெ. அடுத்த நாளே அவருகிட்ட ஒரு டம்ளரு அதே மாதிரி காப்பியாத்தி நீட்டுனேன். ஒன்னெ யாருடீ காப்பி போடச் சொன்னதுன்னு பளீர்ன்னு வெச்சாரு பாரு ஒண்ணு. அழுதுகிட்டே ஒரு வாய் மட்டும் குடிக்க மாட்டீங்களான்னு கெஞ்சுனேன்! சரி சரி அளுகாத குடிச்சு எளவெடுக்குறேன்னுட்டு ஒருமொடக்கு குடிச்சாரா....ட்டேயப்பா சரவண பவன்ல வாங்கியாந்த காப்பியாடீ இது. ஓட்டல்லல்லாம் போயி காப்பியா வாங்குறென்னு ஓங்கி கிட்டு வந்தாரு அடிக்க! சீ! நா ஏன் ஹோட்டலுக்குப் போறேனாம். ராமுப் பாட்டிதான் காப்பி போடக் கத்துக் குடுத்துதுன்னேன். ஃபில்டர்ல போட்ட காப்பி மாதிரியே இருக்கேன்னு சொல்லி ஆகா ஆகான்னு ருசிச்சு சொட்டு சொட்டா குடிச்சாரு!''

''ராமு கெழம் என்னாண்ணுது!''

''அப்புறமும் தெனமும் வந்து காப்பி கொட்டெ வாங்குறது எப்படி? கொட்டை வறுக்கிறது எப்பிடி, எப்பிடி காப்பி கொட்டை வறுத்தப்புறம் இடிச்சி பொடி பண்றதுன்னு தெனமும் வந்து சொல்லிக் குடுக்கும்''

''லேசுபட்டதில்ல ராமுக்கெழவி தெரியும்ல்ல. அதுக்கு எல்லாம் தெரியும் ஆமா! யாருக்கும் பயப்படாது. எந்த நேரத்திலும் எங்கியும் போவும் வரும். பாவம்!''

''பாவம் என்னடி பாவம்?''

''பின்னே என்ன?! எல்லையம்மன் கோவில் தெருலயே பழய பொம்பளை அவ! எல்லாம் இருந்தும் எல்லாரும் இல்லெ!''

''அப்படீன்னா?''

''அதாவுது ராமு கெழவியே வெச்சுக்க யாரும் எப்பமும் தயாரா? இல்லெம்பாங்க எல்லாரும்!''

''புரியல்லியேடி செம்பகா?''

''புரியறதுக்கு என்ன இருக்கு?

''என்ன இல்லெங்கிறியாம் நீயி? இந்த எல்லையம்மங் கோவில் தெருவுல பத்து வூட்டுக்கு தண்ணி தினேய்க்கும் எடுத்து ஊத்துற கெழவி! காணும்! காணும்ன்னு தேடக் கூட யாருமில்லென்னா அதுக்கு என்னடி அர்த்தம்! அதுவும் பதினஞ்சு நாளா பேச்சுகூட இல்லென்னா? நாதியில்லென்னு அர்த்தம்டீ. போக்கில்லன்னு அர்த்தம்டீ. போக்கில்லன்னுதான் அர்த்தம்! ஆமா! அதான்!'' சொல்லும் போதே மங்கைக்கு தொண்டை அழுந்த அடைத்துக் கொண்டு அழுகை பொங்கியது. ஆச்சர்யமாய் அவளைப் பார்த்தாள் செம்பகம். தொட்ட தொண்ணூறுக்கும் உதை வாங்கும் மங்கையின் புருஷங்காரன் வேலை பாக்கிறதும் அதே தண்ணி ஆபீஸ்லதான்! கெழவி தேவலை! தைரியமா எதுத்துகிட்டா! இதுக்கு மேல அமுக்கி வெக்கிறதில அர்த்தமில்லெ. செம்பகா சுத்து முத்தும் பாத்துகிட்டா! ராமுக் கெழவி நடந்து தண்ணிக் கொடத்தோட தள்ளாடித் தள்ளாடி போற மாதிரியே இருக்கு. செம்பவத்துக்கும் இப்ப தொண்டைய அடக்கிது. கண்ணுல தண்ணி முட்டுது! மூச்சு சீறுது. ரகசியம் நெறியிது. துள்ளப்பாக்குது வெளியில!''

''என்ன செம்பா?''

''கெழவி பெய்டுச்சிடி! மனசெ உட்டுறாதெ! எல்லாருக்கும் தெரியும்'!''

''என்னது? செத்துப் போச்சா எஞ்ச? எப்போ? எப்புடீ?''

''எல்லாரும் மூடி வெச்சு அடக்கீட்டாங்க. நாலஞ்சு நாளைக்கு மிந்தியே தெரியும்!''

''ஏம் மூடி வெச்சு என்ன பண்ண? ஏண்டீ?''

''கத்தாத மங்கெ! வெளிய தெரிஞ்சா போலீஸ் ஸ்டேஷனுக்கு நாம போ வேண்டியிருக்கும். ஒம் புருஷன் வரிஞ்சு கட்டி வெளுத்துப்புடும் தெரியும்ல்ல?''

''எல்லாரும் ஒளிச்சாங்க? ஏம் புருஷனும் நீயும் ஏங்கிட்ட ஏண்டீ ஒளிச்சீங்க?''

விக்கி நின்றது பதில். காலை நேரத்து வெயில் நீண்டு வெளுத்து உஷ்ணம் ஏறிக் கொண்டிருந்தது. எல்லையம்மன் கோவில் தெருவில் மங்கைப் பெண் பதறி நின்றாள். என்ன ஊரு! என்ன மனுஷா! என்ன புருஷன்! கல்யாணங்கட்டி தஞ்சாவூர் வந்த நாளா அவளுக்குப் பழக்கமான மூணு பேரு. புருசங்காரன் வேலு, துணையா நின்ன கெழவி ராமு, வாயாடி செம்பவம்! ஆனா நெசமா பக்கத்தொணையாரு? தனியாப் பொறந்து, ஒண்டியா வளந்து செல்லமா திரிஞ்சு வேலுவெப் பாத்து கட்டிக்கணும்ன்னு அடம் பண்ணி எல்லாம் சரி எஞ்சியோ ஓதய்க்கிதே? மங்கை பதைத்துதான் போனாள் புரியாமல் நின்றாள். ஒரு வேளை....

வேலு முறுக்கானவன்! கறுப்புதான். ஆனால் கடைந்து நிறுத்திய மருதை வீரன்தான். மாரில் புதைந்து போகும் அந்தச் சுகம்தான் எல்லா ஏமாத்துக்கும் காரணம். கல்யாணம் ஆகி மூணு வருஷமா இதே மயக்கம்தான் மங்கைக்கு. இந்தக் கெழவி போனதும் எல்லாம் வேஷம்ன்னு பளிச்சின்னு புரியுதே! எப்டி இது?! ஆ! பதினஞ்சு நாளா எல்லாருக்கும் தெரிஞ்சு தெருவே புரிஞ்சுகிட்ட விஷயம் தனக்கு மட்டும் தெரியவேயிலென்னா தான் எத்தனை முண்டமா இங்கேயே இருந்து படுத்து ஏந்திரிச்சு, தண்ணி தூக்கி, சமைச்சு, புருஷங்கூட படுத்து எந்திரிச்சுகிட்டு ஆ! அப்ப வேலுவும் வேஷமா?

''என்னடி பேச்சே காணும்?'' என்று உலுப்பினாள் செம்பகா!

எல்லாரும் தன்னை மண்ணு போட்டு மூடுகிறார்கள்! எல்லாருக்கும் எல்லாமே தெரிஞ்சிருக்கு! தான் ஒரு புத்தியில்லாதவள்னு தெரியுது. எல்லாருகிட்டயும் எல்லாம் பேசாதே பேசாதேன்னு ஓதை பிச்சு எடுக்கிறானே வேலு. அதுகூட இவ மக்குப் பொண்ணுன்னுதானோ? வேலுகிட்ட ஒதை வாங்க காரணமே வாண்டாமே மங்கைக்கு! இதோ இந்த செம்பகாவுக்கும் இவ மட்டி முண்டென்னு தெரிஞ்சுதான் இருக்கு. அப்ப தனக்கு தானே கூட இதெல்லாம் தெரியலை மங்கைக்கு! மங்கையெ வேலு அடிக்கும் போது கூட சந்தோஷம் தாங்க முடியாது அவுளுக்கு? புருஷன் அடிச்சதை யாருகிட்டயாவது சொல்லிக்கல் லென்னாக் கூட அடங்காது அவளுக்கு! அப்ப? கல்யாணமும், புருஷனும், தஞ்சாவூருக்கு வந்து வாழ்ந்த சொகமும் அப்புடி மயக்கிப் புட்டுதுல்லெ..... ஆ! மூளையில்லாத முண்டமா இத்தனை வருஷமும்......மூணு வருஷமா.

''ஏண்டி இப்டி விருமத்தி புடிச்சாப்ல உச்சி மோட்டே முழிச்சுப் பாத்துகிட்டு அழுவுறியாம்? கெழவி போனாப் போறா! தெருவுல எல்லாம் பாக்குது பாரு. ஓம்புருசங்காரன் வரப் போற நேரம். இன்னம் இட்லி திங்கலீல்ல...''

திரும்பி செம்பகாவை வெட்டினாற் போல ஒரு பார்வை பார்த்தாள் மங்கை. பயந்து போனாள் செம்பகா. அதற்கு முன் வார்த்தைகள் அவளைச் சுட்டன!

''ஏம்புருஷனுக்கு நீ ஏண்டி பயப்புட்றியாம்? ஒனக்கென்ன வந்தது!''

''வந்தா ஒன்னையில்ல பிரி கட்டப்போகுது! போடி! போயி இட்லியெ அவி. தொவயலெ அற! ஏங்கிட்ட ஏண்டி பாயிற? கெழவி இருந்தா வெக்கங் கெட்டுப் போயி அவகிட்ட கேட்டுக் கேட்டு செஞ்சிகிட்டு இருந்தியே எல்லாத்தையும். இப்ப ஆளு போய்ட்டா! ஒரேயடியா முண்டுறிய? ஒம் மாமியாரா ஆத்தாளா?''

கோபத்தில் ஒரு கணத்தில் பூலோகம் திமிற செம்பகத்தைப் பார்த்து காறிப் துப்பினாள் மங்கை. இரு பொண்களிடையிலும் அவர்கள் ரகசியம் கிழிபட்டது! வாயில் வந்ததெல்லாம் வார்த்தை என்று மங்கை மண்ணை அள்ளித்தூத்தினாள். வண்டை வண்டையாய் கெட்ட வார்த்தைகள் மாலை மாலையாய் வந்தன. ''ஏம் புருசனெ நீ வெச்சிருக்கிறது தெரியாதா?'' என்கிற வார்த்தைகளை எத்தனை அசிங்கமாய் பிரயோகம் பண்ணலாம் என்று மங்கைக்கு அப்போதுதான் அவளுக்கே தெரியத் தெரிய அவள் வாய் வழியாக வந்தன! உண்மைதானே வேலுவுக்கும் இந்தக் கழுதைக்கும் இருக்கிற கேவலத்தை உயிரோடு இருந்த கிழவி ராமு ஒரு நாளும் சொன்னதே இல்லெ! செத்துப் போனதுக்கு அப்புறம் தெரிய வெச்சிட்டாளே!

வேலு நன்றாகத்தான் குடிப்பான் - அதுகூட இனிக்கும் மங்கைக்கு. தினமும் குடித்துவிட்டு வந்து அவளை சாத்துவான்! வள்ளுண்டாம் பட்டுக்கு ஒரு பைப்கனக்ஷன் குடுக்க வந்திருந்தான். ப்ாவாடை தாவணியோட அவளை உத்து பாத்துகிட்டே நின்னான். ஆசெ வந்துருச்சி! வேலியோரமா அசிங்கமா கண்ணடிச்சான். பைப்புக்காக தெருவுல குழி தோண்டி பைப்பு நட்டான். தண்ணி கொண்டாந்த பைப் வழியா ஊருக்கு தண்ணி கொட்ட ஆரம்பிச்சுது. ஆஹா ராத்திரி பகலா பைப் போட்ட அசதி மங்கெ வூட்டுத் திண்ணையில் படுத்தப்ப யாரும் தடுக்க வாண்டாம்னு உட்டுட்டாங்க. விடிய காலம்பற கொல்லைப்புறத்துக்கு எப்டி வந்து கூப்புட்டான்! எப்டி மண்டத்தியா இவளும் இருட்ல எந்திரிச்சு யாரும் தெரிஞ்சுக்காம ஏம் போனா? இப்ப கூட மங்கைக்கி கசப்பாத்தான் இனிக்கிது! பாவி! கொல்லைக் கெணத்தடியிலியே - அத்தனை அவசரமா விடிய விடிய மங்கெ மயங்கித்தான் முட்டாளா போனா - பத்தே நாள்ள கல்யாணம்ன்னாங்க! தெரியத்தெரிய வெட்கப்பட்டா யாருக்குத்தான் புரியாது. வெக்கப்படுறப்பவே சந்தோஷம் தாங்கலெ மங்கைக்கு! புருஷன் தண்ணி டிப்பாட்மண்டு தண்ணி ஆபீஸுன்னாங்க. வேலுவும் ரொம்ப நல்லாத்தான் இருந்தான். அப்ப எஞ்ச தப்பு? எது தப்பு?''

அவளுக்கு இப்ப எல்லாமே தப்புன்னு தோணுதே எப்புடி? அதான் தெரியலை. மங்கையெ வேலு இஞ்ச எல்லயம்மன் கோவிலுக்கு கொண்டாந்தப்போ எல்லாமே நல்லதா - எல்லாருமே நல்ல மனுஷாளா தெரிஞ்சுதே அது எப்டியாம்? செம்பகா கொஞ்சுவா! கட்டித் தழுவிக்குவா. எல்லா வேலையும் இவளெச் செய்யவுடாம அவளே செஞ்சு குடுப்பா. அஞ்ச எல்லாரும் இவளெ புதுப்பெண்ணுன்னு கீழ உடாம தாங்குனாங்க! தப்பாட்டம்

மங்கைக்கிப் புரியல்ல! வெள்ளையா எல்லாமே சந்தோஷமா இருந்தது. மயக்கினான் வேலு!

வேலு எப்பமும் எதுக்கும் அடிப்பான். அது ஒரு வீரம்ன்னு பேசுவான் - மங்கைக்கும் அது சரின்னுதான் அப்பல்லாம் தோணுச்சு! வீட்டுக்குள்ளயே இந்த செம்பகமும் வேலுவும் என்னன்னமோ பேசுவாங்க. மங்கையும் அஞ்சதான் இருப்பா. ஆனா தெரியாது! அண்ணே அண்ணேன்னு சொல்லிக்கிட்டு கொழஞ்சுதான் பேசுவா இந்த செம்பகம்! எப்டி அது? ஆனா, நெருக்கமா நின்னு கிட்டு பேசுறது யாருக்குமே தப்பா தெரியாது! வேலு முரடு! அதும் வேண்டியிருந்தது அப்ப! இதால மத்ததெல்லாம் கண்ணுக்கே தெரியலை! குப்புற எவ்வளவு நேரம் கிடந்து அழுதுகிட்டு இருந்தான்னு மங்கைக்கே தெரியாது. சின்ன வீடுதான். ஒரே அறை - சின்னக்கதவு. கதவெத் தள்ளிக்கிட்டு நிழல் வந்தப்பதான் செம்பகாவோட கூச்சல் எப்ப ஓஞ்சிது உள்ளாற வந்து குப்புற வுழுந்தோம்னு மங்கைக்கு தெரியுது! நிழல் கிட்ட வர்றது புரியிது காலை நேரத்துலியே! அவனுக்கு நேரம் எதுக்கு? மேலவுளுந்து பொறண்டா சரி! சீ!

வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். நிச்சயம் அடிக்கப் போறான்.

''என்னடீ? ஒண்ணும் புரியிலியா? கட்டெதுளுத்துப் போச்சா காலையிலியே என்னடி செம்பகாகிட்ட வம்புக்கு போயி கை நீட்டியிருக்கே!''

செம்பகா மீது கை நீட்டியது, அடித்தது அவளுக்கே தெரியாமல் நடந்திருக்கிறதே! வேலுவை உற்றுப் பார்த்தாள். அளவு கடந்த வெறுப்பும் அலட்சியமும் பொங்கியது. மனுஷனாம் இவன்! ச்சீ! கத்தினாள்! ஆமாம் அலறல்தான்!

''எனக்கு ராமுப்பாட்டி வேணும்! இந்தத் தெருவுல இனிமே என்னால இருக்க முடியாது! ராமுப்பாட்டி எங்க? பயமா இருக்கு!''

வேலுவுக்கு எங்கோ கத்தி சொருகியது போல் அதிர்ந்து போயிற்று. இப்போதுதான் கான்ஸ்டபிள் 48 அவன் தண்ணி தொட்டிக்கு வந்து விசாரித்து விட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு வரச் சொல்லிவிட்டு போனார். அவளை அடித்து நொறுக்க வேண்டும் என்று வேகம் விரைந்து வந்தது. ஆனாலும் பயம் உந்தியது. மறு பக்கம் பத்து பதினைந்து நாட்களுக்கு முந்தி அவன் பொறுப்பில் நகராட்சி விட்டிருந்த கீழ் நிலைத் தொட்டியில் பத்து லட்சம் லிட்டர் தண்ணீரில் மிதந்த ராமுக் கிழவியின் விரைத்த பிணத் தோற்றத்தில் ஆடியது! இவளுக்கு தெரிந்து விட்டதா? பயமில்லை தெரியட்டுமே! அவனா கொன்னான். ஒரு கிழவி தொண்ணூறு வயசு தொண்டுக் கிழம்! என்னா பேச்சுப் பேசும்! தண்ணி வேணுமாம் அவளுக்கு! இப்ப என்ன ஆச்சாம்!!

''நீ செய்யிறது த்ரோகம்டா வேலு! மங்கைக்கி ஒண்ணும் தெரியாதுடா பச்சை குழந்தையன்னா கொண்டு வந்துபோட்டு கொண்ணுகிட்டு இருக்கெ!'' - இப்பமும் உயிரோட பேசற மாதிரியேல்ல இருக்கு - தன்னையே அமுக்கிக் கத்தினான்.

''ராமுக் கெழவி வரமாட்டாடீ! செத்துத் தொலைஞ்சிட்டா! கேக்காத இனிமே''

''ஏன் வரமாட்டா கொண்ணுட்டிங்களா ரெண்டு பேருமாச் சேந்து?''

'என்னா தைர்யம் இந்த மங்கெ முண்டைக்கி! என்னா கேழ்வி கேக்குறா பாரேன்'. ஓங்கி அறைந்தான் வேலு! வாய் ஓரமாய் வழக்கம் போல கிழிந்து ரத்தம் கண்டது. அடித்து மிதிக்க வழக்கம் போல் கூச்சலிடும் மங்கையைக் காணும். இன்னைக்கு அடிக்க அடிக்க இடிச்ச புளியாய் நின்றாள்! குலை நடுங்கியது வேலுவுக்கு!

வழக்கமில்லா வழக்கமாய் எதிர்த்துக் கத்தினாள் குரல் பெரிசாய் எழுந்தது. ''வெட்டி பொதச்சிட்டீங்களா? போலீஸ்ல போயிச் சொல்லப் போறேன்.''

''இல்லடீ அறிவுகெட்ட முண்டம். கெழம் அவளாவே போயி ரிஸர்வாயர்ல உளுந்துட்டா தெரியும்ல்ல - பத்து பதினைஞ்சு நாளாச்சி நாயே. செத்து! போலீஸ் தான் வந்து எடுத்தாங்க''- அவனறியாமலே கத்தினான் இப்படி.

''இல்லெ நான் நம்பமாட்டேன். ஓங்க ரெண்டுபேரு வண்டவாளத்தையும் தெருவுக்கு கொண்டு வராம நான் வுடமாட்டேன்! இன்னைக்கே ஊருக்குப் போயி எங்கண்ணன், அப்பா எல்லாரோடயும் திரும்பி வாறேன்''-

''போயேன்! போயி ஒங் கூட்டத்தோட வா! யாருக்கு பயம்? மடக்களுத! போலீசுக்குப் போங்க! அஞ்ச சொல்லுவாங்கல்லெ? புரியும்''

''கிழவியெ என்ன பண்ணீங்க?'' திரும்பவும் அதே கேள்வி!

''யாரு என்னடீ பன்றதுக்கு என்னடீ முண்டம் இருக்கு! ரிஸர்வாயர் தொட்டிக்குள்ள உழுந்து செத்துப் போய்ட்டா! தற்கொலெ! அவளுக்கு யாரு இருக்காங்க?''

''ஆமா எனக்கு தெரியாதுன்னு நெனச்சிட்டு ஆட்டமா போடுறீங்க? தண்ணி கொழாயில வர்றதெப் புடிக்க கொழாயடியிலே கெடக்கும் அது! அது போயி தற்கொலதாம் பண்ணிகிச்சுன்னு ஒட்டு மொத்தமா எல்லாருமா புளுகித் தள்ளி போலீஸ்ல நம்ப வெச்சிங்களாக்கும்?'' வெறியோடு கத்தினாள் மங்கை.

''ஒனக்கேண்டி பொத்துகிட்டு ஒழுகுதாம்?''

''ஆமா இந்த நாத்தக் கும்பீல, சாக்கடை கூட்டத்துல ஒரு மனுஷி இருந்தா எனக்கே இப்பத்தான் புரியிது. பெத்த கடமைக்கி எங்கப்பா அம்மா என்னெப்பாத்து ஆசைப்பட்டதுக்கு அப்டியே புடிச்சு தள்ளிவுட்டாங்க. நீயும் கட்டுன கடமை எழவுக்கு இளுத்தாந்து வெச்சிருக்கெ! அந்த செம்பகாச் செறுக்கிய வெச்சிட்டு என்னெ குதுரெ ஓட்டிகிட்டு காலம் தள்ளிகிட்டு இருக்கலாம்ன்னு பாத்தெ. கெழவி ராமு எல்லாத்தியும் சொல்லீட்டுத்தாம் போச்சா? ஒங்க லூட்டி ஒண்ணும் பாக்காமப் போய்டுச்சே! எனக்கு இன்னும் என்ன வேணும்?''

''செம்பகாவெ இதுல இளுக்காதடி முண்டெ! அவளுக்கு ஒண்ணும் தெரியாது!''

''ஏந்தெரியாது? நாந்தாய்யா தெரியாமயே முழு முண்டமா இருந்திருக்கேன். ஓங்க அக்ரமம் புரியாம என்னெ நீயி என்னா பண்ணி கிட்டு இருக்கென்னு கூட தெரியாமெ ராமுக் கெழவியையும் என்ன பண்ணினீங்கென்னு புரியாமெ இத்தினி நாளு இருந்திருக்கேம் பாரு! நா முண்டந்தான்... முண்டமே தாண்டா!''-

''என்ன சொன்னெ 'டா'வா! பேயி புடிச்சுட்டுதாடி ஒனக்கு!''

''ஆமாண்டா! இந்தத் தெரு ஜனம் எல்லாம் முச்சூடுமா ஒளிச்சாலும் எனக்குப் புரியாமப் போகாது. நீங்க எல்லாரும் சேந்து ராமுக் கெழவிய கொண்ணுட்டீங்க. ஆனா, எல்லாருமாச் சேந்து மூடிட்டீங்க! தெரியும்! யாரு வந்தாலும் கண்டுபுடிக்க முடியாது! செம்பகாவோட நீ பண்ற அசிங்கம் மட்டும் தெரியவா போகுது. அது மாதிரித்தான் இதெல்லாம் ஒனக்கு ஒண்ணுமேயில்லை! ஆனா நான் வுடமாட்டேன்!''-

''என்னடீ செய்வெ?'' - ஆங்காரத்தோடு கத்தினான் வேலு. வாசலில் தெருக்கூட்டம் நின்றது. சண்டை சுவாரசியம்! வேலு அடித்துக் குமிக்கிறதைப் பார்க்கிற ஆசை தெருவில் எல்லாருக்கும் உண்டு. லல்லு மாமி, டெய்லர் ரெங்கன், சம்பகா, கோயில் அர்ச்சகர் பொண்ணு பத்மா, எதிர்கடை அவ்வா எல்லாரும் நின்றனர்.

''ராமுக் கெழவி மாதிரியே ரிசர்வாயர்லே வுளுந்து சாவேன்! ஆமா!'' வேலு விக்கித்து நின்றான். அவன் திமிர் எல்லாம் ஒடுங்கி ஒரே நிமிடத்தில் வண்டவாளம் தெருவில் இறங்கி எங்கும் நாறுகிறது. எல்லார் கண்களிலும் அதே பயம். சமூகம் முழுமையும் அதிர காறித் துப்பினாள் மங்கை!

''ராமு ஏண்டி செத்தா? தெரியுமா?'' குசுகுசுத்தாள் லல்லு பக்கத்து ராஜி கிட்டெ! ''தெரியாதே! என்னவாயிருக்கும்?'' - ஜானம்மா குசுகுசுத்தாள்.

''தண்ணி வேணும்ன்னு தண்ணிக்கி அலஞ்சா!''

''அதான் செத்தா?''

''எப்டி?''

''- தெரியாதோடீ நோக்கு? ராமுக் கெழவி தெருவுல இருந்து மங்கெக் குட்டி வூட்டுக்குள்ள பூந்துட்டா! கிராமத்துக் குட்டியோன்னோ அது! ரெண்டும் ஒட்டிண்டுடுத்து. ராமுக் கெழமும் திருவியாத்து பக்கத்துக்காரி. ராமுக் கெழவியோட யார் அண்டை குடுக்க முடியும்? சொந்த மகன் கூட அடிச்சுத் தொரத்திட்டானே!''

'' அதான் இப்பொ தண்ணீல மொதந்து போயிட்டா''

''எப்டி?''

''அசடே! எப்டி எப்டீன்னுண்டு. தினமும் பத்து ஊட்டுக்குத் தண்ணி ஊத்தினாத்தான் சாப்பாடுன்னு விதி ராமுக் கெழத்துக்கு! இல்லியா? மங்கெக்குட்டி இஞ்ச வந்ததுலருந்து சாப்பாடு போட்டு ஊட்டி விட்டாளோல்யோ?''

''அதுக்குத்தான் கெழவி செம்பகா கதையெச் சொல்லி மங்கெக் குட்டியெத் தூண்டி விட்டுட்டாளே''

''ஸ்ஸ்... அதல்லாம் பேசாதேடீ அசத்து!''

''பீமன் மாதிரி இருந்துண்டு இந்தப் பொண் மங்கெயெ இப்படிப் போட்டு உதச்சு கொண்ணு பேத்து எடுக்கறானே இந்தப் பாபி வேலுப்பயல்!''

'' இவாளுக்கு இதெல்லாம் ஒண்ணும் புதிசு இல்லெடீ கோமு! ஆனா இந்தப் பொண் இவங்கிட்ட வந்து மாட்டித்து பார்! பகவானே!''

''எப்டி மாமி, ராமுப்பாட்டி காணாமெப் போனா சொல்லுங்கோளேன்!''

''எவளுக்குடீ தெரியும்! தினமும் கொழாயடியிலே கிடப்பா! மூணுமணி இருட்ல கொழாய்ல சத்தம் வரும் புஸ்ஸ்ஸ்ன்னுட்டு! அப்பயே கொடத்தோட காத்துண்டிருப்பா ராமு! யாரும் அவளண்ட போட்டிபோட முடியாது. போன வருஷம் தெருவுல விழுந்து கால் பெசகிண்டுடுத்து ராமுவுக்கு. அதுக்கப்புறம் மின்ன மாதிரி தண்ணி சேந்திண்டு ஓட ராமுப் பாட்டியாலெ முடியலை! ராமாம்ருதம்ன்னு பேரு! யாரோடயும் ஒட்டமாட்டா. நான் கல்யாணம் பண்ணிண்டு முப்பத்தஞ்சு வருஷத்திக்கு மிந்தி வந்தப்பயே ராமு தொண்டு கெழவி! நரம்பு நரம்பா இருப்பா! இப்ப எனக்கே அறுபது தாண்டிருத்து. ராமுவுக்கு வயசு நூறுக்கு மேலதான் இருக்கும். ஆனா யாரு கேட்டாலும் தொண்ணூறுன்னு டுப்பு வுடுவா! பயம் செத்துருவோம்ன்னு. அவளுக்கே ஆச்சர்யம்!''

''அது சரி மாமீ! எப்டி செத்தா?''

'' தண்ணி கேட்டு வம்பு பண்ணினா ராமு! தூக்கிப் போட்டு மிதிச்சுட்டான்.''

''எல்லாருக்குமே தெரியற சாதாரண சங்கதிடீ இது எவன் கேழ்க்கறதாம்? கேட்டு என்ன பண்றதுடீ பொண்களா! தண்ணி வேணும்ன்னு கேட்டா ராமு. குடுக்க மாட்டேன்னான் வேலு! பத்து ஊட்டுக்கு தண்ணீ ஊத்தக் கூட தண்ணி இல்லன்னான்... அஞ்சு பக்கமும் தண்ணி எப்பவும் ஓட்ற தஞ்சாவூர்ல தண்ணி ஏண்டா இல்லென்னு சண்டைக்கிப் போனா ராமுப் பாட்டி. ரிஸர்வாயர்ல மொதந்தப்புறந்தான் தண்ணி ஏன் வுடமாட்டேங்கிறான்னு தெரிஞ்சிண்டா பாட்டி ராமு!''

''காலம்பற நாலு மணிலருந்து ஏழரை மணி வரைக்கும் தானே தண்ணி வரது. ஏன்? கூட ரெண்டு மணிநேரம் தண்ணிவுட்டா என்னவாம். ராமுப்பாட்டி ஆபீஸ் ஆபீஸா ஏறி எறங்கினா! ஆபீஸர்லாம் சிரிச்சா! கெழத்துக்கு வீர்யம். கமிஷ்னர்ண்ட கூட போய்டுத்து. எல்லாருக்குமே இது பெரிய விஷயமில்லை.''

''அட தண்ணிவிட்டா என்னவாம்!''

''போடி! தண்ணியெத்தான் விக்கறாளே! பெரிய பெரிய மனுஷன் வீட்டுக்கு கணக்கில்லெ... ஹோட்டல்கள், வியாபார ஸ்தலங்கள், எல்லாரும் தனிய்யா பணம் தர்றா! கணக்கு வழக்கில்லாம தண்ணிபுடிச்சு தொட்டீல ரொப்பிக்கறா? நம்ம மாதிரி அன்னாடங்காச்சிகளுக்கெல்லாம் தண்ணி ஏதுக்குடி? போ!''

'' ராமுப்பாட்டி விடலெ! வட்டம் ஆலவட்டம்! சதுர தலைவர் வரைக்கும் போனா. கெழவி தானே? வயித்துப் பாட்டுக்கு கேக்கறாளேன்னுட்டு கமிஷனர் ஏதோ கொஞ்சம் மிந்தி தண்ணிவிடச் சொல்றேன்னுட்டு போம்மா நாம் பாத்துக்கறேன் னிருக்கார்! கவுன்ஸிலர் கிட்டெல்லாம் போயிருக்கா! எல்லையம்மங் கோயில் வீதிக்கி ரெண்டு மணி நேரந்தாம்மா தண்ணிவுட முடியும்ன்னுருக்கான் அந்தப் பயல்க! ராமுப் பாட்டியெத்தான் தெரியுமே வாழத்தண்டு மாதிரி உரிக்க உரிக்க வந்துண்டேயிருந்தா! ஜனங்களுக்குத்தானே நல்லது பண்றோம்ன்னு ஒரு வெறி! ஏன் ரெண்டுமணி - காலையில நாலு மணிக்கே விட்றதாச் சொல்றேளே அஞ்சு மணிவரை கொழாய்ல சத்தம்தான் வருது. அப்பறம் ஒன்றரை மணி நேரம்தான் தண்ணி வர ஆரம்பிக்குது அப்பறம் நிறுத்திடறாளே! எம்பொழப்பே தண்ணி புடிச்சு ஊத்தறதுதான்னு யோசிக்கப் படாதான்னு ராமு கெழவி கதறியிருக்கா!''

''அது சரி மாமீ அதுக்காக கொன்னா போடணும் அவளெ. இவா வீட்டுச் சொத்தா என்ன? இல்லடி போடி கெழ முண்டம்ன்னு வெரட்டியடிச்சிருக்கக் கூடாதா?''

''அதானெ முடியலெ! கெழவி தோண்டிண்டே பூமிக்குள்ள கங்காஜலத்தைத் தேடிண்டு கெளம்பீட்டா!''

''அப்டீன்னா?''-

''நமக்கு விடாத ஜலம் எல்லாம் எங்கதான் போறதுன்னு கொழாய் வழியாதானே பூந்து பாத்து கண்டு பிடிச்சுட்றதுன்னு ஒரு வெறி வந்துடுத்து கெழவிக்கு!''

''கூத்தான்னா இருக்கு! பேசாம வரவேண்டியதுதானே? இப்ப நாம் இல்லியா என்ன?''

''ஒனக்கென்னடி கெணறு இருக்கு! தஞ்சாவூர் நாலு ராஜ வீதிலயும் ஒவ்வொரு வீட்லயும் கெணறு நூத்தம்பது வருஷமாவே இருக்கு! சிவகங்கைத் தண்ணி ஊர்றது! பைப்புத் தண்ணி குடிக்கத்தானே! அதுகூட ஒரு கொடம் கெடைக்காமயா போறது?''

''தண்ணிய என்ன மாமி செய்வான் இந்தப் பயல்கள்ளாம்!''

''சத்தப் படுத்தாதெ! கொலன்னா விழுந்திருக்கு! எல்லாம் நோண்டிண்டிருக்கா. போலீஸ் ஸ்டேஷன் போயி நிக்கப் போறையா. ஒங்காத்துக்காரன் வக்கீல் குமாஸ்த்தான்னு தைர்யமா? கொலடீ பொண்ணே கொல! இது!'' ஜானம்மா பொரிந்து தள்ளினாள். இன்னும் மங்கை வீட்டில் கோலாகலமாய் சண்டை நடந்துதான் கொண்டிருந்தது. வேலு புரட்டிப் போட்டு மங்கையை வெளுத்துக் கொண்டிருந்தான். முகவாய்க் கட்டையில் கை கொடுத்தபடி பெண்கள் சுற்றிலும் நின்றனர். கூட்டத்தைப் பற்றி வேலு கவலைப்படவேயில்லை. சைக்கிளை எடுத்துக் கொண்டு வேகமாய் சாராயக் கடைக்குப் போனான் - ஆறவில்லை! பெண்கள் மங்கைக்கு உயிர் இருக்கிறதா என்று உள்ளே போய்ப் பார்த்துக் கொண்டிருந்தனர். விடிந்து வெயில் வட்டம் மேலேறிவிட்டிருந்தது.

கோவில் படிக்கட்டில் ஜானம்மா உட்கார்ந்து கொண்டாள். கண்களில் கண்ணீர் அடர்ந்தது. சுற்றிலும் பெண்கள் நின்று ஊமையாய் எல்லாம் தெரிந்தும் வாய்திறக்க வழியில்லாமல் பெரு மூச்சும் சிறுமூச்சுமானார்கள்.

''தண்ணியில ஏது மாமி காசு? தண்ணியெ என்ன பண்ணுவா?''

''தண்ணி மட்டுமில்லெடீ பொண்ணே இன்னுங் கொஞ்ச நாள் பொறுத்துக்கோ காத்துகூட இல்லாமப் பண்ணிடுவா பாரேன்! எல்லாம் காசாகும்டீ காசாகும்! ஆகாயத்தையும் துண்டு பண்ணி அடச்சு வித்துடுவான்!''

''வேலுவா?'' -

''பேரு சொல்லாதெடி! தண்ணியடிச்சட்டு வந்து மங்கெக்குட்டியெ பொறட்டிப் போட்டு மிதிக்க இப்ப வந்துடப் போறான் காதுல உளுவும்''

''வேலுவா?''

''எவனா இருந்தா நோக்கென்னடி? ஊர்ல ஒவ்வொரு மெடிகல் யூனிட்டுக்கும் எவ்வளவு தண்ணி வேணும் தெரியுமா? ஒரு லட்சம் லிட்டராம்! பெரிய ஹோட்டல்ல எல்லாம் குடிக்க காவிரி ஜலம்தான் வேணும்! ஏராளமா வேணும்! அதுக்கெல்லாம் ப்ளாக் மார்க்கட்ல தண்ணி வாங்கறாளாம்! நீ மூச்சுவிடாத''.

''இதெல்லாம் நடக்குமா மாமீ! தண்ணியெப் போயி இப்டி விப்பாளோ?''

''ஓனக்கு ஒரு கொடம் போறும். பஸ்டாண்டு பூரா பெரிய ஹோட்டல் பத்து இருபது இருக்கு. ஒவ்வொரு ஹோட்டலுக்கும் நிதய்க்கும் ரெண்டு கெணத்து அளவுக்கு தண்ணி வேணும்! சுலபமா கெடைக்கறது! வாங்கிக்கிறா!''

''அதுக்கு என்னவாம்! அதோட சேத்து ராமுப் பாட்டிக்கும் ரெண்டு குடம் ஜலம் விட்டா என்னவாம்! தேஞ்சா பெய்டுவா?''

''வேலு குழாய் ஆய்வாளர் தெரியுமோ? சர்வசதா காலம் சாராயம்தான்! மீனு கறி எறா சொறான்னு தின்னுட்டு மங்கெகுட்டிய சாத்து சாத்துன்னு சாத்தறான் எதுக்காக? எங்கிருந்து வருது? அரசுங்கறா! நம்ம ஆட்சிங்கறா! வேலு மாதிரி இன்னும் தஞ்சாவூர்ல இருபது குழாய் ஆய்வாளன்கள் இருக்காளாம். இதெல்லாம் உங்க மாமாவுக்கு அத்துபடி! அவர்தான் சொல்வார்! ஒரே வருஷத்துல சின்ன வூடு வெச்சிட்டான்! சொந்தவூடும் கட்டிட்டான். ஒன்றரை லகரம் செலவுங்கறா. மங்கை கழுத்து காதெல்லாம் மினுங்கறது பாத்தியா? ஒரு ஹோட்டல்லயும் மாச சம்பளம் மாதிரி மொதல் தேதியன்னிக்குப் போய் நின்னான்னா உலுப்பை மாதிரி சுளையா ஐநூறு ரூபாய் வந்து விழுந்துடுமாம்! ஒவ்வொரு மெடிகல் யூனிட்லயும் ஏராளம், தாராளம் தெரியுமோ. நீயானா தண்ணிய விக்க முடியுமா மாமீங்கறே!''

வேலுவைக் காணும்! வெய்யில் ஏறிக் கொண்டிருந்தது. நெருங்கி உக்காந்து குசுகுசுன்னு மாமிகள் கதைத்துக் கொண்டிருந்தது. சுப்பா கேட்டாள், ''எல்லாருக்கும் இதெல்லாம் தெரியுமோ மாமி''

''தெரியாமையா? தெரிஞ்சு என்னடீ பொண்ணே பண்ணுவா? பணம்ன்னா வேலை பண்றது? யாரு பூனைக்கி மணி கட்றது. பூனை வால்ல நெருப்புன்னா பணமா எரியறது? பூனையும் தகனம்தான் அப்புறம்'' என்றாள் ஜானம்மா.

''காவேரி, புதாறு, வெண்ணாறு, வெட்டாறு எல்லாம் போறாதா மாமி?''

''எல்லா ஆறும் வத்தீடுத்துடி! தஞ்சாவூர்க்குள்ள டவுன்ல புதாறு மட்டும்தானே ஓட்றது? பத்தலை. மாசத்துல பத்து நா ஓடினா ஆச்சர்யம். மைசூர்காரப் பாவி வேற தண்ணிய புடிங்கிண்டானா - ஆத்துல இனிமே ஏதுடி ஜலம். இருந்தாலும் இந்த கொலைக்காரப் பாவிகளும் ஒண்ணும் கொறஞ்சவன் இல்லெ''

''அப்ப என்னதாம் மாமி பண்றதாம்?''

''தஞ்சாவூர் மேட்டுப் பகுதியெல்லாம் ரெண்டு மூணு மணிதான் இப்பக்கி தண்ணீன்னு விட்றா! யாரும் கேழ்கறதேயில்லை! வெண்ணாத்துலயிருந்துதான் தண்ணி தொட்டிக்கு தண்ணி கொண்டாறா! இதெல்லாம் ஒண்ணும் பண்ண முடியாதாம்... எங்க ஆத்துக்காரர் உங்க மாமா 'பவித்ரமா' சொல்லுவார்! தண்ணி திடீர்னு சுத்தமா வராதெ நின்னு பெய்டுமாம். அப்பதான் ஊரில் உள்ளவா திக்கித் தெணறப் போறாம்பார்! நாந்தான் சொல்லுவேன் கெணறெல்லாம் அடஞ்சா பெய்டும்? தஞ்சாவூரைச் சுத்தி அகிழ்மேடு ஏறிக் கெடக்கு! பள்ளத்துல கும்பித்தண்ணி மழையில சேரச் சேர வந்துண்டே இருக்கு. கெணத்துல ஓயாம தெக்கலங்கல்லாம் நூறு வருஷமா தண்ணி ஊறிண்டேயிருக்கு யாருக்கு! சுத்தமா வேற பில்ட்டர் ஆகி வராதுன்னு சொல்வேன்.''

''இத்தனை மேல்நிலைத் தொட்டி கீழ்நிலைத் தொட்டி யெல்லாம் கட்டியிருக்காளே மாமி? அப்பமும் தண்ணி தஞ்சாவூருக்குப் பத்தலை?''

''யாருக்குடீ தெரியும்? காவிரியே போய்டுத்து! தண்ணி இனிமே பிரச்னைத்தான். கூறு போட்டு விக்கறான் வேலு! யார் கேக்க முடியும்ங்கற? ராமுப் பாட்டி கேட்டா... ரிசர்வாயர்ல மெதக்க உட்டான்! யாரு கண்டு பிடிக்க முடியும்?''

''வேலு கொண்ணு போட்டதா?''

''ச்சீ வாயை மூடு. அப்படியா நான் சொன்னேன்? என்னை வந்து இழுத்துட்டுப் போகப் போறா பாரேன்! நமக்கெதுக்குடி இதெல்லாம். நாம் போறேன்டிம்மா!'' ஜானம்மா குசுகுசுத்து விட்டு மூஞ்சியை அழுத்தித் துடைத்துக் கொண்டாள். சொன்னபடி போகவில்லை. ஜானம்மாவின் கண்களில் பரவசம்! எல்லாரும் அவள் வாயிலிருந்து வரப்போகும் ரகசியத்துக்கு மௌனமாய் அஞ்சலி செலுத்திபடி சூழ்ந்து உட்கார்ந்திருந்தார்கள். இனி ரகசியம் ஏதுமில்லை. எல்லாருக்கும் தெரியாதது என்ன அங்கே?

''பத்து பதினஞ்சு நாளாச்சே? இன்னுமா கண்டுபுடிக்கல்லை?''

''தெரியாட்டிதான்டி கண்டு புடிக்கணும்? ராமுப் பாட்டிக்கு ஆரிருக்காளாம்? தேடப் போறாளா, தோண்டப் போறாளா?''

''வெறும் தண்ணிக்கா இந்தப் பாடு?''

''தெண்டைக் குழி வத்தினாத்தாண்டி உங்களுக்கு புரியும்! இப்ப புரியாது!''

''அதுக்கு ராமு கெழவியத் தீப்பானேன்?'' என்றான் லல்லுமாமி.

''யாரு தீத்தாளாம்? அவளாவே எனக்குத் தண்ணி வேணும்னு கேட்டுண்டே போயி ரிஸர்வாயர்ல விழுந்து செத்தா யாரு என்ன பண்ண முடியுமாம்!''

''என்ன மாமி பேச்சு இது? நீங்களே ரெண்டும் சொல்றேளே?''

''மூணும் சொல்வேண்டி லல்லு. சொன்னதையும் இல்லெம்பென் தெரியுமோ? விஷயம் பெரிய விஷயம்! நானும் போயி ராமுக்கிழவி மாதிரி தண்ணீல மெதக்கவா? இப்பல்லாம் மிந்தி மாதிரியா இருக்கு? ஒரு மட்டு மரியாதை எல்லாம் போய்டுத்து! என்னான்னா என்னடீங்கறான் நேத்தி பயல்லாம்! ஏதோ ஆச்சு. ராமு வாய வெச்சிண்டு சும்மா இல்லாம ஆடினா! போய்ட்டா. இஞ்சே இருந்துதான் என்ன பண்ண போறா? இப்பமேங்குட்டி துமுரறா அதே மாதிரி துள்றா! என்ன பண்ணப் போறான் வேலு!''

''பண்றதுக்கென்ன? மங்கையும் உண்டாயிருக்கா. அவம்மாத்துல கொண்டு போயி தள்ளிட்டு வந்துடுவான் வேலு! தெரியாதா?''

''இருக்கிற தண்ணி நெறய்யவே இருந்தாலும் எப்படிப் பத்தாமப் போறது மாமீ! உங்காத்துக்காரர் எலக்ட்ரிக் மாமாதானே ஆபீஸ்ல சொல்லி ஏற்பாடு பண்ண முடியாதா?'' என்றாள் சுப்பாளு!

''தண்ணி இருக்கு! இன்னும் ஆயிரம் வருஷத்துக்கு தஞ்சாவூர்ல தண்ணியா இல்லெ. ஆனா வெள்ளைக்காரன் நூத்தம்பது வருஷத்துக்கு மிந்தி போட்ட பம்பிங் ஸ்டேஷன் பைப் லைன் எல்லாம் உடஞ்சு நாசமா கெடக்கு. தண்ணி கெடைக்காமப் போனதுக்கு இந்த வாட்டர் ஸிஸ்டம் மாத்தாம கெடக்கறதுதான் காரணம்னு மாமாவே சொல்வார்டி. ஆனா காலெல்லாம் வெளுத்து குச்சியா புளுத்துப் போயும் கூட ராமுக் கெழவி தண்ணி தூக்கிப் பொழச்சிண்டிருந்தாளே. அவ வாயில மண்ணு போட்டானே அதான் நேக்குத் தாங்காமே இதெல்லாம் பேத்தீட்டேன்!''

''யாருமே சரி பண்ண மாட்டாளா மாமீ இதெல்லாம்?''

''சரி பண்ணினா பணம் வரது நின்னுடும்டீ! தண்ணி அடஞ்சு போயிருக்கிறதுனாலதான் விக்க முடியறது. ராமுபாட்டி கமிஷ்னரண்டை போனாளாமே?''

''ஐம்பது வருஷமா இப்படித்தான் இருக்கும்மா! ஸிஸ்டத்தையே மாத்தினாத்தான் சரியா தண்ணி வரும். ஒண்ணும் பண்ண முடியாது! ரிப்பேர்லாம் தாங்காது! சரி பண்ற வரைக்கும் இப்படி ரெண்டு மூணு மணி நேரந்தான் தண்ணிவிட முடியும் பொறுத்துண்டு போங்கோன்னானாம். அந்த ப்ராம்ண்ணனும் குழாய் ஆய்வாளர் வேலுவண்டை வந்து சொல்லீருக்கா இப்படி இன்னதுன்னு. 'இந்த ஸிஸ்டத்தை யாருடி கெழவி மாத்த முடியும்? தெருவுக்கு தெரு உடஞ்சு புதஞ்சு கிடக்கு ஒனக்கென்னடி போச்சு'னானாம் மஹானுபவான். 'கடங்காரத்தாயழீ! என் வயத்துல அடிக்றயேடா'ன்னு கத்தினாளாம் ராமுப்பாட்டி?''

''அந்தக் கெழவிக்குத்தான் எத்தனை ஆகாத்யம் பாத்தாயோ? விடல்லியா அப்புறமும்?''

''ஒரு வீட்டுக்கு ஆறு ரூபா கொடுக்கறா. பத்து வீடாவது ஊத்தணும். தண்ணி பிடிக்கச்சையே சண்டை அடிதடி! மல்லுகட்றது எல்லாம் உண்டு. ஒரு குடம் விட்டா மறு குடம் விட ஒரு மணி ஆறது! தண்ணியோ வரத்து நின்னுருத்து! மாசம் அறுபது ரூபாய்ல குடலெக் கழுவக் கூட தண்ணியில்லென்னா என்ன பண்ணுவா கெழவி?''

''அதான் சண்டைக்கிப் போய்ட்டா நேர'' - என்றாள் சுப்பாளு.

''மங்கெக்குட்டிதான் விடாமே சோறு குடுத்துண்டிருக்கா! வீடா வாசலா கெழத்துக்கு? கொழாயடியே கதீன்னு மொதக்கொடம் எங்கொடம்ன்னுட்டு அஞ்சியே சுருண்டு கெடக்கும் அடிச்சு மொதக்க உட்டுட்டான்?''

''இவளால என்ன இடைஞ்சல்! ஏன் கொல்லணுமாம்?''

''ஸ்... வாய தொறக்கப்படாது! வெளியே தெரிஞ்சா ஸிஸ்டமே பாழாய்டும்டீன்னு மாமா வாய மூடி மெரட்டிண்டேருக்கார் தெரியுமோ?''

''கொல்லணும்ன்னா கொல்றா? எல்லாருமே சேந்துதானே ஆயிருக்கு?''

''போடி கெழம் வெளியன்னு வெளியே புடிச்சு தள்ளியிருக்கான்! போய்டுத்து என்ன பண்ணுவான்! தூக்கி கீழ் நிலைத் தொட்டீல போட்டுட்டான்?''

''ஆமாடீ! நீ தான் பக்கத்துல இருந்து நேர்க்க பாத்தெ! போயி சொல்லு போ போ!''

''யாரு பாத்தா? பாத்தாத்தான் என்னவாம்? சொல்லணுமாக்கும்? போங்கோடீ.''

''யாரு என்னவானா யாருக்கென்னடி? பேத்தப் படாது சும்மா தெரியுமோ.''

''ஐயய்யோ!'' என்ற குரல் கூக்குரலாய் குழாய் ஆய்வாளர் வேலுவின் வீட்டிலிருந்து கிளம்பிய போது கோவில் திண்ணையில் எதிரில் கூடி குசுகுசுத்த பெண்கள் எல்லாரும் திடுக்கிட்டு எழுந்து திரும்பி நின்றார்கள். சிலர் ஓடினார்கள். திரும்பத் திரும்பப் பெண்களின் கூக்குரல் எழும்பிக் கொண்டிருந்தது. அங்கிருந்து பெண்கள் ஆண்கள் என்று பேதமில்லாது அந்தச் சிறிய வீட்டுக்குள்ளிருந்து உள்ளும் வெளியிலுமாய் புகுந்து புகுந்து வெளியே பாய்ந்து கொண்டிருந்தார்கள். கூச்சல் ஓயவில்லை. அழுகை புரண்டு எழும்பியது.

''என்னது? என்னவாம்?'' என்று நிமிர்ந்து கேட்டாள் ஜானம்மா.

''கோவிச்சுண்டு மங்கெ எலிப்பாஷாணத்தைச் சாப்பிடுட்டாளாம்டீ? வூட்டுள்ள பூந்து கதவைச் சாத்தி தின்னுட்டாளாம்'' என்று கத்தினாள் நாகுமாமி. திங்கு திங்கு என்று தெருவில் சுத்தி எங்கோ ஓடினாள். கூட்டமும் சிதறிச் சுழன்றது. ஜானம்மாளும் லல்லுமாமியும் கூட்டத்துக்குள் புகுந்து மறைந்தார்கள். ஆண்களும், பெண்களுமாய் காலை நேரத் தெருவில் கூடிக்

கரைந்தார்கள். எல்லாரும் கேள்வி மேல் கேள்வி போட்டு குடைந்தார்கள். 'அந்த பொண்ணா? ஏஞ் செத்துச்சாம்?''

பெண்களின் பிலாக்கணம் கதறலாய், நீண்ட சிரிப்பாய் எழுந்தது. உள்ளிருந்து அழுகையாகக் கிளம்பிய அது சிரிப்பாக விட்டு விட்டு கதறலாய் கேட்டது. சிரிப்பு அல்ல என்றாலும் சிரிப்பாய் எதிரொலித்தது போலிருந்தது அழுகை.

வேறு ஒன்றுமில்லை. அந்தச் சிரிப்பு தெருக் குழாயிலிருந்து வந்து கொண்டிருந்தது. 'கொஷ்... ஷ்... ஷ்...' என்று தண்ணீர் விடாத காற்று விட்டு விட்டு சிரித்த சிரிப்புதான் அந்தச் சப்தம். ஆவி படர்ந்து குழாய் மூக்கிலிருந்து 'புஸ்ஸ்ஸ்' என்ற எக்களிப்பு கேட்டுக் கொண்டேயிருந்தது. பகல் ஏறிய போதும் அடுத்த நாள் காலை நாலு மணி வரைக்கும் எப்போதும் போல வந்து கொண்டே யிருக்கும் வெறும் காற்றுச் சப்தம் தான் அது! அது சிரிக்காமல் என்ன செய்யும்?

(சுபமங்களா, ஏப்ரல் 92)